ஈரோடு திண்டல் வேலாயுதசாமி ஆலய புனராவர்தன ஸ்ரீஅபிராமி அம்பிகை உடனுறை அமிர்தகடேஸ்வரர் நூதன ஆலய கும்பாபிஷேகம் திருகுடமுழுக்கு நன்னீராட்டு பெருஞ்சாந்தி பெருவிழா வருகிற 22.2.2026 அன்று நடைபெறவுள்ளதை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து அமைச்சர் சு.முத்துசாமி அலுவலர்க ளுடன் ஆலோசனை மேற்கொண்டார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அ.சுஜாதா, மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா உள்ளிட்ட பலா கலந்து கொண்டனர்

அரியலூர் சட்டமன்ற தொகுதி சார்பில் "தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை பொதுக்கூட்டம் திருமானூர் ஒன்றியம்,சாத்தமங்கலம் தலைவர் கலைஞர் திடலில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு செயலாளர் முனைவர் இரா.தி.சபாபதி மோகன், அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள். உடன் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், அரியலூர் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் ப.அன்பரசு,மாவட்ட துணை செயலாளர்கள் சி.சந்திரசேகரன், லதாபாலு, ஒன்றிய பொறுப்பாளர் இரா.கென்னடி மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்துகொண்டனர்.

கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் வாழை விவசாயிகள் மேம்பாட்டிற்கு

ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

மக்களவையில் ஆ.மணி கேள்வி

புதுடெல்லி, பிப்.16-

கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் வாழையை மிகுதியாக உற்பத்தி செய்யும் தருமபுரி போன்ற மாவட்டங்களில் வாழை உற்பத்தி,பரப்பளவு,மகசூல் குறித்து மதிப்பீடு செய்ய ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

தமிழ்நாட்டில் வாழை விவசாயிகளுக்கு நடவு பொருள் விநியோகம்,நோய் எதிர்ப்பு வகைகள்,ஒருங்கிணைந்த பூச்சி தடுப்பு மேலாண்மை உள்ளிட்ட உதவிகளுக்கு மத்திய திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு ஏதேனும் திட்டங்களை தமிழ்நாட்டிற்கு நீட்டித்து உள்ளதா ?

கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் வாழை மதிப்பு சங்கிலி,குளிர்பதன சேமிப்பு வசதி,சந்தையை இணைக்கும் வகையிலான போக்குவரத்து கட்டமைப்புகளை மேம்படுத்த ஒன்றிய அரசால் ஒதுக்கப்பட்டு,பயன்படுத்தப்பட்டுள்ள நிதி குறித்த விவரங்கள் என்ன?

தருமபுரி போன்ற வேளாண்மை பாதிக்கபட்ட மாவட்டங்களில் நேரடி நிவாரணமோ அல்லது காப்பீட்டு ஆதரவினையோ ஒன்றிய அரசு அளித்துள்ளதா? மேலும் வாழை உற்பத்தியை பெருக்க,அதன் விலையை நிலைப்படுத்த,பதப்படுத்துதல் மற்றும் வாழை ஏற்றுமதி வாய்ப்புகளை பெருக்கும் வகையில் ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என்று வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் ராம்நாத் தாக்கூரிடம் தருமபுரி எம்.பி.வழக்கறிஞர்.ஆ.மணி கேள்வி எழுப்பி உள்ளார்.

இரா.மாரிமுத்து வரவேற்புரை! நாகை சட்டமன்ற தொகுதி அளவில்

'வெல்லும் தமிழ்ப்பெண்கள்' ஸ்டாலினின் மகளிர்படை பரப்புரை பயிற்சிக் கூட்டம்!

என்.கௌதமன்- ஆர்.டி.எஸ்.சரவணன்- செல்வ. செங்குட்டுவன்- எம்.ஆர். செந்தில்குமார், முகமதுசுல்தான் பங்கேற்பு!

நாகை. பிப்.16-

நாகை மாவட்டம் நாகை நாகை மாவட்ட திமுக அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் நாகை க சட்டமன்ற தொகுதி அளவில் பாகத்திற்கு ஒருவரை பொறுப்பாளராக தேர்ந்தெடுத்து அவர்களுக்கு இல்லம் தோறும் பரப்புரை பற்றிய பயிற்சிக்கான வெல்லும் தமிழ்ப்பெண்கள் என்ற தலைப்பில் ஸ்டாலினின் மகளிர் படைக்கு பரப்புரை பயிற்ச்சிக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஒன்றிய கழக செயலாளர்கள் ஆர்.டி.எஸ். சரவணன், செல்வ.செங்குட்டுவன், நாகூர் நகர கழக செயலாளர் எம்.ஆர். செந்தில்குமார், திட்டச்சேரி பேரூர் செயலாளர் முகமதுசுல்தான் ஆகியோர் முன்னிலையில் வைத்தனர். நாகை நகர மன்ற தலைவரும் . நகர கழக செயலாளர் இரா மாரிமுத்து செயலாளர் வரவேற்றார். கூட்டத்தில் நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக்கு தலைவர் கௌதமன் தலைமை தாங்கி வெல்லும் தமிழ்ப் பெண்கள் ஸ்டாலினின் மகளிர்படையினர் பரப்புரையின் போது செய்ய வேண்டிய பணிகள் குறிக்கு விளக்கி பேசினார். கூட்டதில் பொதுக்குழு உறுப்பினர் எஸ் பன்னீர்செல்வம், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் ஆர்.ஏ.டி. அண்ணாதுரை, எஸ். பால் ராஜ், பி.முருகானந்தம், இளம்.சுந்தர், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் த.தமயந்தி, மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் புவனேஸ்வரி செந்தில்குமார், மகளிரணி தலைவர் கருப்பாயி

துணைத்தலைவர்.ஜெயலட்சுமி,துணை அமைப்பாளர்கள் கலைச்செல்வி, வள்ளி ,பதுருநிஷா, கவிதா, மகளிர் தொண்டர் அணி மோகனா தலைவர் தொண்டரணி வலைதளம் பொறுப்பாளர் மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர்கள்அமுதா, ரீனா, நாகை நகர கழக நிர்வாகிகள் வெற்றிலை கடை சிவா. அபுபக்கர், சித்தரா குலோத்துங்கள்மற்றும் வெல்லும் தமிழ்ப்பெண்களின் ஸ்டாலினின் மகளிர்படையினர் உள்ளிட்டோர் கலந்து கொண்டார் .முடிவில் மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் ஜெயலட்சுமி நன்றி கூறினார்.

கூட்டத்தில் கழகத் தலைவர் திராவிட மாடல் அரசர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி வரும் மகளிர் உரிமைத் தொகையை பா.ஜ.க., அ.தி.மு.க.வின் சதியை முறியடித்து தேர்தல் நடைமுறை கால மாதத்திற்கு மகளிர் உரிமைத் தொகை 3 மாதத்திற்கு 3,000 மற்றும் கோடைகால சிறப்பு தொகை ரூபாய் 2,000 என ரூபாய் 5,000 த்தா 1.31 கோடி மகளிருக்கு வழங்கிய கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும், பூத்திருக்கு 10 பேர் நியமிக்கப்பட்டுள்ள ஸ்டாலின் மகளிர் படையினர் வீடு வீடாக சென்று திராவிட மாடல் அரசின் திட்டங்களை எடுத்துக் கூறி திராவிட மாடல் அரசு பெண்கள் நலத்திட்டங்களால் எவ்வாறு அவர்களுக்கும் அவர்களது குடும்பத்திற்கும் வளர்ச்சிக்கும் பயன்பாட்டு வருகிறது என்று விளக்கி,தமிழ்நாடு முதல்வர் மு க ஸ்டாலின் முதல்வராக தொடங்கிட, நலத்திட்டங்களும் நிக்காமல் தொடர்ந்திட ஆதரவு கட்டாயம் தேவை என்று திட்டங்களை கூறி ஆட்சியின் சாதனைகள விளக்கிட வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கோவை வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதி, ஆலந்துறையில் ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை புறக்கணித்த பா.ஜ.க. துணை போகும் அ.தி.மு.க.வை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாநகராட்சி துணை மேயர் வெற்றிச்செல்வன், மாவட்ட பொருளாளர் அப்துல் ரகுமான், தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ராதாகிருஷ்ணன் உள்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட கழக, கிளைக் கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் மாவட்டம்,ஆலத்தூர் மேற்கு ஒன்றியம், ஆலத்தூர் இல் இருந்து செட்டிக்குளம் செல்லும் தார் ரோட்டில் இருந்து நாட்டார்மங்கலம் ஈச்சங்காடு செல்லும் குறுக்கே செல்லும் மண் சாலையை ரூ.80 லட்சம் மதிப்பீட்டில் புதிய தார்ச்சாலையாக போடும் பணியை, அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார். சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர்.அருண்,டி.ஆர்.சிவசங்கர், மாவட்ட மீனவரனி அமைப்பாளர் கோபாலபுரம் செல்வராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்,

சோ.பா. மலர்வண்ணன் தலைமை! திருக்குவளையில் கீழையூர் மேற்கு ஒன்றிய

தி.மு.க. இளைஞரணி கிளை, பாக புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

என். கௌதமன்- என். இளையராஜா சிறப்புரை !இரா.மாரிமுத்து - பி.என். கார்த்தி பங்கேற்பு!

நாகை, பிப்.16-

நாகை மாவட்டம் கீழையூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. இளைஞரணி கிளை, பாக புதிய நிர்வாகிகள் அறிமுகம் கூட்டம் திருக்குவளையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கீழையூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் சோ.பா.வண்ணன் தலைமை தாங்கினார். நாகை நகர கழக செயலாளர் இரா. மாரிமுத்து,

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி. என்..கார்த்தி , துணை அமைப்பாளர் டேனியல் சத்தியா ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் கார்த்தி வரவேற்றார்.

கூட்டதில் நாகை மாவட்ட கழக. செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன், மாநில இளைஞர் அணி துணை செயலாளரும், தாட்கோ தலைவர் என். இளையராஜா ஆகியோர் சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் 2026 சட்ட மன்ற தேர்தலில் கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலினின் அவர்கள் வெல்வோம் 200, படைப்போம் வரலாறு என்பதற்கு இணங்க கீழ்வேளூர் சட்ட மன்ற தொகுதியில் கழக தலைவர் அறிவிக்கும் வேட்பாளர் வெற்றிக்கு தாய் கழகத்தினேரோடு இணைந்து உழைத்திடுவது என்றும், திராவிட மாடல் அரசின் சாதனைகளை சமூக வலைதளத்தில் பதிவிட்டு அரசின் சாதனைகளை பொது மக்களிடம் சென்று சேர்த்திடுவது என்றும், மார்ச் 1ம் தேதி பிறந்த நாள் காணும் கழகத் தலைவர் தமிழக முதல்வர் அவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவத்துக் கொள்வது என வும், பிறந்த நாளை கீழையூர் மேற்கு ஒன்றிய திமுக இளைஞரணி சார்பில் சிறப்பாக கொண்டாடுது என வும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர்கள் இல பழனியப்பன், எஸ்.சிவக்குமார், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் வி.எம்.கே.பாலாஜி, பி. தியாகராஜன், ஜோதிபாசு, சண்முகநாதன், கணேசன், வீரராகவன், செந்தில் ஒன்றிய தி.மு.க. நிர்வாகிகள் வை.சண்முகசுந்தரம், சுரேஷ், பார்த்திபன், குமார், வருகநாதன். அசோக்குமார், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் குமார், தேவராஜன், விக்னேஷ், ஸ்டாலின், சக்கரவர்த்தி, அருண் மற்றும் இளைஞரணி கிளை, பாக புதிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சிந்தனைச் சிற்பி சி.பி. சிற்றரசு
பிப்ரவரி 16 (1978)

கழகம் தொடங்கப்பட்டபோது அமைக்கப்பட்ட பிரச்சாரக்குழுவில் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். பின்னர், கழகத்தில் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும், வெளியீட்டுச் செயலாளராகவும் பணியாற்றினார்.

1953களில் தீப்பொறி என்ற ஏட்டை சொந்தமாக நடத்தினார். 1959களில் இனமுழக்கம் என்ற ஏட்டிற்கு ஆசிரியராக இருந்தார்.

சிந்தனையை கிளறிவிடும் பேச்சாளர். நாடகங்கள் மற்றும் திரைப்படத்திற்கு உரையாடல்கள் எழுதியிருக்கிறார்.

தலைவர் கலைஞர் அவர்கள் சி.பி.சிற்றரசு அவர்களை தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராக்கி மேலவைத் தலைவராக தேர்ந்தெடுக்கச் செய்தார்.

1989ல் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு "சிந்தனைசிற்பி சிற்றரசு" பெயரை தலைவர் கலைஞர் சூட்டினார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.